## ஆளுநர் மாளிகை, நீதிமன்றம், அரசு அலுவலகங்களில்

# சுதந்திர தின விழா கோலாகல கொண்டாட்டம்



சுதந்திர தினத்தை முன்னிட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தாஹில் ரமானி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குனர் ஹரிஹரன், பெரம்பூர் ரயில்வே மைதானத்தில் தெற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளர் பி.கே.மிஸ்ரா, நுங்கம்பாக்கம் சரக்கு மற்றும் சேவை, மத்திய கலால் வரி துறை அலுவலகத்தில் சென்னை மண்டல வடக்கு முதன்மை ஆணையர் ஹேமாவதி, சென்னை துறைமுக தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பி.ரவீந்திரன், ராஜாஜி சாலையில் உள்ள சுங்கவரித்துறை அலுவலகத்தில் தலைமை கமிஷனர் அஜித்குமார், சென்னை கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் சீத்தாலட்சுமி ஆகியோர் தேசிய கொடியேற்றி வைத்தனர். நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

சென்னை, ஆக. 16: சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக ஆளுநர் மாளிகை மற்றும் அரசு அலுவலகங்களில் கொடியேற்று விழா மற்றும் நிகழ்ச்சிகள் நேற்று நடந்தன.

தமிழக ஆளுநர் மாளிகையில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் கூடுதல் தலைமை செயலாளர் ஆர்.ராஜகோபால் மற்றும் ராஜ்பவன் ஊழியர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

● சென்னை மாநகராட்சியில் கமிஷனர் பிரகாஷ் தேசிய கொடி ஏற்றிவைத்தார். பள்ளி மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் நடந்த நிகழ்ச்சியில் மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய 64 பேருக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கினார். மேலும், கடந்த ஆண்டுகளில் அதிக மாணவர்களை பள்ளியில் சேர்த்த 71 சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கினார். அதேபோல், 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 25 சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

● சென்னை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் சீத்தாலட்சுமி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரவித்தார்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் நடந்த சுதந்திர தினவிழாவில் மாநில தேர்தல் ஆணையர் பழனிசாமி தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் தேர்தல் ஆணைய செயலாளர் க.பழனிச்சாமி மற்றும் ஆணைய பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

● சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தாஹில் ரமானி தேசிய கொடியை ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் உயர் நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம், டிஜிபி திரிபாதி, சென்னை போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதன், தமிழ்நாடு பார்கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், துணைத்தலைவர் கார்த்திகேயன், அகில இந்திய பார்கவுன்சில் இணை தலைவர் எஸ்.பிரபாகரன், உறுப்பினர்கள் ஜி.மோகனகிருஷ்ணன், கே.பாலு, பிரிசில்லா பாண்டியன் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள், உயர் நீதிமன்ற பதிவாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

● தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தில், ஆணைய தலைவி மீனாகுமாரி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அப்போது, நீதிபதிகள் துரை ஜெயச்சந்திரன், சித்தரஞ்சன் மோகன்தாஸ், டிஜிபி லட்சுமி பிரசாத், டிஎஸ்பி பாலகிருஷ்ண பிரபு உள்ளிட்டோர் கலந்து



மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் ஆணையர் பிரகாஷ் கொடியேற்றி வைத்து, கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். உடன் மாநகராட்சி அதிகாரிகள்.

கொண்டனர்.

● மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், ஆணைய தலைவர் நீதிபதி தமிழ்வாணன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் ஆணையத்தின் பதிவாளர் மேத்யூ எடி, பாஸ்கரன், சென்னை மாவட்ட (வடக்கு) நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் தலைவர் கே.லட்சுமி காந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

● தமிழ்நாடு பார்கவுன்சிலில், தமிழ்நாடு புதுச்சேரி பார்கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் அகில இந்திய பார்கவுன்சில் இணை தலைவர் எஸ்.பிரபாகரன், பார்கவுன்சில் உறுப்பினர் பிரிசில்லா பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

● சென்னை துறைமுகத்தில் நடந்த நிகழ்ச்சியில் துறைமுகத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பி.ரவீந்திரன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதையடுத்து, மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு நடந்தது.

வருமானவரித்துறை அலுவலகத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் வருமான வரித்துறை முதன்மை தலைமை ஆணையர் பி.ஹேமாவதி தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் வருமானவரித் துறை உயர் அதிகாரிகள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

● சுங்கத்துறை அலுவலகத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் முதன்மை தலைமை சுங்க ஆணையர் அஜித்குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் சுங்கத்துறை எஸ்பி குப்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

● சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர் ஹரிஹரன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதையடுத்து, கடந்த 25 ஆண்டுகளாக சிறந்த முறையில் களப்பணியாற்றிய வாரிய ஊழியர் ரவிக்கு பாராட்டு பத்திரம் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் பிரபு சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

● சென்னை மெட்ரோ ரயில் சார்பில் நடந்த சுதந்திரதின நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பங்கஜ் குமார் பன்சால் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். இதையடுத்து நடந்த நிகழ்ச்சயில் மெட்ரோ ரயில் ஊழியர்களுக்கிடையே நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற 64 பேருக்கு நிர்வாக இயக்குநர் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ், நரசிம் பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

● சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் தலைமை அலுவலகத்தில் மேலாண் இயக்குநர் கணேசன் தேசிய கொடி ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் போக்குவரத்து கழக பணியாளர்களின் குழந்தைகளில் கடந்த கல்வி ஆண்டில் 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கணேசன் ரொக்கப் பரிசுகளை வழங்கினார். சென்னை அரும்பாக்கம் அரசு சித்த மருத்துவமனையில் நிலைய அதிகாரி டாக்டர் ஜெயந்தி கொடியேற்றினார். நிகழ்ச்சியில் மருத்துவமனை அதிகாரிகள் ஆறுமுகம், சரவணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

● சென்னை எழும்பூரில் உள்ள ஆர்.பி.எப். அலுவலகத்தில் நடந்த சுதந்திர தினவிழாவில் விரைவில் ஓய்வு பெறவுள்ள சப்-இன்ஸ்பெக்டர் விநாயகமூர்த்தி கொடியேற்றினார். நிகழ்ச்சியில் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.